# O.S. No.81/2019 நாள் 01.08.2022

**வா.சா.1 ஜார்ஜ்டேவிட் மீண்டும் அழைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய சொந்த ஊர் தஞ்சாவூர். என்னுடன் பிறந்தோர் ஐந்து பேர், அதில் இருவர் இறந்துவிட்டார்கள். அவர்கள் பெயர் ஆரோக்கியமேரி, ஜனோபியாமேரி, அருள்மேரி, சவுரிராஜ். அவர்களுடன் எனக்கு பேச்சுவார்த்தை உண்டு. நான் நிலவணிகம் செய்கிறேன், அத்துடன் மருந்து கடை, தேங்காய் வியாபாரம் ஆகியவை செய்கிறேன். எனக்கு கொரானாவிற்கு முன்பு மாத வருமானம் 70,000 முதல் 80,000 வரும். அத்துடன் வாடகையும் வரும். நான் வருமானவரி செலுத்துகிறேன். 2010, 2011 ஆண்டுகளில் இருந்து வருமானவரி செலுத்துகிறேன். என்னுடைய ஆடிட்டர் பெயர் தமிழரசன். ஆரம்பத்தில் சாமிநாதன் என்ற ஆடிட்டர் மூலம் வருமானவரி கணக்கு தாக்கல் செய்தேன். இரண்டு ஆடிட்டர்களும் தஞ்சாவூரை சேர்ந்தவர்கள். அவர்களிடம் என்னுடைய வருமான வரி சம்மந்தமான ஆவணம் இருக்கும். வருடத்திற்கு வருமான வரி எவ்வளவு செலுத்துகிறேன் என்று கணக்கு பார்த்தால் தான் சொல்லமுடியும். வருமான வரி கணக்கில் நான் யாருக்கு கடன் கொடுத்திருக்கிறேன், யாருக்கு நான் கடன் கொடுக்க வேண்டும் என்ற விபரங்கள் இருக்கும். கையில் எவ்வளவு தொகை என்ற விபரம் வருமானவரி படிவத்தில் விபரம் இருக்குதா என்று பார்த்து தான் சொல்லமுடியும். 1, 2 பிரதிவாதிகளுக்கு கொடுத்த தொகை விபரத்தை வருமான வரி கணக்கில் காட்டியிருக்கிறேன். கிரய ஒப்பந்தம் போட்டுவிட்டு சுத்த கிரயம் செய்து தராததால் ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். 09.12.2017 ஆம் தேதி என்னுடைய அலுவலகத்தில் வைத்து கிரய ஒப்பந்தம் போட்டோம். நில வணிகமும், தேங்காய் கடையும் ஒரே அலுவலகத்தில் தான் வைத்திருக்கிறேன். நான்கு சொத்துக்கும் சேர்த்து கிரயத்தொகையாக ரூ1,71,50,000 க்கு போட்டிருக்கிறோம். கிரய ஒப்பந்த தேதியில் என்னிடம் எவ்வளவு தொகை இருந்தது என்று கணக்கை பார்த்து தான் சொல்லமுடியும். கிரய ஒப்பந்த தேதியில் நான் தொகை தரவில்லை அதற்கு முன்பே ரூ24,75,000 தொகையை பல்வேறு தேதிகளில் கொடுத்திருக்கிறேன். ஒப்பந்தத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு 07.12.2017 ஆம் தேதி என்னுடைய கணக்கில் இருந்து ரூ 13, 10,000 மும், என்னுடைய தம்பி சவுரிராஜின் கணக்கில் இருந்து ரூ.19,65,000 மும், வங்கி பரிவர்த்தனை மூலமாக கொடுத்திருக்கிறேன். ரூ24,75,000 தொகையை

பல்வேறு தேதிகளில் கொடுத்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை ஒப்பந்தம் போட்டுவிட்டதால் அந்த ஆவணத்தை எடுத்துவிட்டேன். சாட்சி மீண்டும் அந்த ஆவணங்களை பிரதிவாதிகளே வாங்கி கொண்டதாக சொல்கிறார். அந்த தொகைக்காக ரசீது போட்டு பிரதிவாதிகளிடம் கொடுத்திருந்தேன். அதை அவர்கள் வாங்கி கொண்டார்கள். அந்த ரசீது வங்கி ரசீதோ, பதிவு பெற்ற ரசீதோ அல்ல. ரசீது பதிவு பெற்றது அல்ல என்பதால் செல்லாது என்றால் சரியல்ல. நிலவணிகம் என்பதால் ரொக்கமாக கொடுக்கலாம். அந்த ரசீதுகள் கிரய ஒப்பந்தத்திற்காக தான் கொடுக்கப்பட்டது. எந்த தேதிகளில் ரசீது கொடுத்தேன் என்பதை கணக்கை பார்த்து தான் சொல்லமுடியும். அந்த தேதிகளில் ஏன் ஒப்பந்தம் செய்துகொள்ளவில்லை என்றால் பெரிய தொகையாக கொடுத்தால் தான் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என பிரதிவாதிகள் சொல்லிவிட்டார்கள். அந்த ரசீதுகளின் நகல் என்னிடம் இல்லை. கிரய சொத்து எங்கெங்கு இருக்கிறது என்று நான் போய் பார்த்தேன். கிரய சொத்திற்கான வில்லங்கத்தை போட்டு பார்த்தேன். கிரய ஒப்பந்தம் பதிவு செய்யப்படாத கிரய ஒப்பந்தம் என்றால் சரிதான். ரூ.100 க்கு மேல் பரிவர்த்தனை செய்தால் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும். பதிவு செய்யப்படாத ஆவணத்தை வைத்து சொத்தை வாங்க முடியாது என்றால் தவறு வாங்கலாம். கிரய ஒப்பந்தம் செய்த சமயத்திலேயே ஏன் கிரயம் செய்யவில்லை என்றால் பிரதிவாதி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் அடமானம் வைத்திருந்தார் அதை ரத்து செய்வதற்காகவும் பிரதிவாதி என்னுடைய உறவினர் என்பதால் அவர் மீதிருந்த நம்பிக்கையிலும் கிரயமாக பதியவில்லை. வங்கி கணக்கு குறித்து கிரய ஒப்பந்தத்தில் சொல்லியிருக்கிறேன். நான் ரூ57,50,000 கொடுத்திருக்கிறேன் இன்னும் 1,14,00,000 தரவேண்டியுள்ளது. ரூ 57,50,000 கொடுத்ததற்கு கிரய ஒப்பந்தத்தை தவிர வேறு ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை. ரூ57,50,000 கொடுத்ததற்கு கிரய ஒப்பந்தம் எழுதி கொடுத்ததால் வேறு ஆவணம் தேவையில்லை. மேலும், கிரய சொத்திற்கான மூல ஆவணங்களின் நகல் கொடுத்திருக்கிறார். மூல ஆவணங்களின் ஜெராக்ஸ்களை கொடுத்த விபரத்தை கிரய ஒப்பந்தத்தில் சொல்லவில்லை. வழக்குரையில் சொல்லியிருக்கேனா என்று ஞாபகமில்லை. 07.12.2017 ஆம் தேதி தொகை கொடுத்ததை காட்ட வங்கி கணக்கு தாக்கல் செய்திருக்கிறேன். வங்கி கணக்கை பார்த்தால் 07.12.2017 ஆம் தேதி நான் பணம் கொடுத்தது தெரியும். ரூ57,50,000 கொடுத்ததை என்னுடை யவருமானவரி

கணக்கில் காட்டியிருக்கிறேன். கிரய ஒப்பந்தத்தை வழக்கறிஞர் திரு. மணிவண்ணன் தயாரித்தார். கிரய ஒப்பந்தத்தை தயாரிப்பதற்கான விபரம் நான்தான் சொன்னேன். பிரதிவாதிகளின் முகவரியை அவர்களது ஆதார்அட்டை ஜெராக்ஸ்ஸை வைத்து சொன்னேன். ஆதார்அட்டை ஜெராக்ஸ்ஸை அவர்கள் வாங்கி சென்றுவிட்டார்கள். பிரதிவாதிகள் என்னுடைய சமூகத்தை சேர்ந்தவர்கள் நாங்கள் வாரவாரம் கோவிலில் சந்தித்து கொள்வோம் அதை வைத்து உறவினர் என்று சொன்னேன். 2009, 2010 லிருந்து 1 ஆம் பிரதிவாதி எனக்கு பழக்கம். 2017 ஆம் ஆண்டு தான் 2 ஆம் பிரதிவாதி எனக்கு பழக்கம். 1 ஆம் பிரதிவாதியின் சொந்தஊர் எனக்கு ஞாபகமில்லை. 1 ஆம் பிரதிவாதி 2009, 2010 ஆண்டிலிருந்து அவர் கோவிலுக்கு வந்தபோது அவ்வப்போது பார்த்திருக்கிறேன். தனிபட்ட விழாக்களிலும் நான் அவரை பார்த்திருக்கிறேன். எங்கள் உறவினர் வீட்டு விழாக்களில் பார்த்திருக்கிறேன். என் வீட்டு விழாக்களுக்கு அவரை அழைத்தது இல்லை. 1 ஆம் பிரதிவாதி ஊட்டியில் மிளகு வியாபாரம் செய்கிறார், மேலும் வங்கியில் ஏலத்திற்கு வரும் சொத்துக்களை வாங்கி நிலவணிகம் செய்வதாக அவர் சொன்னார். 1 ஆம் பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்று எனக்கு நேரடியாக தெரியாது. 1 ஆம் பிரதிவாதி ஊட்டியில் எந்த இடத்தில் மிளகு வியாபாரம் செய்கிறார் என்று எனக்கு தெரியாது. 1 ஆம் பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்பதற்கு நான் ஆவணம் பார்த்ததில்லை அது குறித்து விசாரித்தும் தெரிந்துகொள்ளவில்லை. குழந்தைஏசு கோவில், அடைக்கல மாதா கோவில், இருதய ஆண்டவர் கோவில், மாதாகோட்டை ஆலயம் ஆகிய கோவில்களில் 1 ஆம் பிரதிவாதியை பார்த்திருக்கிறேன். நானும், 1 ஆம் பிரதிவாதியும் பார்த்து கொண்டோம் என்ற விபரம் அங்கு இருக்கும் சாமியாருக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக சாமியாரோ வேறு யாரோ பஞ்சாயத்து பேசவில்லை.

1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.